[1974 மார்ச் 26

(முற்பகல் 9.30)

சென்னை நகரில் கழிவு நீரகற்றுத் திட்டம்.

*614 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் பாதாளச் சாக்கடை அமைப்புத் திட்டம் நிறைவேற்றப்படாமல் இருக்கும் பகுதிகள் எவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

1. அமைந்தகரை, அரும்பாக்கம்
2. கிண்டி, வேளச்சேரி
3. கோட்டூர் ஊரூர்
4. செம்பியம் விஸ்தரிக்கப்பட்ட பகுதி, மடுவமாநகர்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடை இல்லாத நிலைமையில் பொது மக்களின் சுகாதார வாழ்வு பாதிக்கப்படுகிறது. கொசுக்கள் தொல்லை அதிகமாக இருக்கிறது. ஆகவே, எல்லா இடங்களிலும் பாதாளச் சாக்கடை கட்ட ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது பொதுவான குறை. எல்லா இடங்களிலும் நிறைவேற்ற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. சென்னை நகரின் புற நகர்ப் பகுதிகள் வளர்ச்சி அடைந்து வருகின்றன. அந்த வளர்ச்சிக்கேற்ப 34 லட்சத்தில், 62 லட்சத்தில் தனித்தனியாக திட்டங்கள் எடுக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. பண வசதிக்கேற்றபடி அவை ஒவ்வொன்றாக நிறைவேற்றப்படும்.

திரு. வை. பாலசுந்தரம் : சைதாப்பேட்டை, பழைய மாம்பலம் போன்ற பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப் பட்டும், பொது மக்களுக்குப் பயன்படாத வகையில் இருப்பதால் உடனடியாக அவற்றைச் செயல்படுத்த அரசு முன்வருமா.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒரு திட்டம் நிறைவேற்றப் படுகிறபோது கண்ணுக்குத் தெரியும் வகையில் சாக்கடைகள் கட்டப்படுவதைக் காணலாம். அவை நிறைவேறிவிட்டாலும்

1974 மார்ச் 26]

பம்பிங் ஸ்டேஷன் அமைய வேண்டும், அங்கிருந்து தண்ணீரைக் கொண்டு சேர்க்கக்கூடிய இடம் அமைய வேண்டும், அவை எல்லாம் முடிகிற நேரத்தில் இந்தத் திட்டம் செயல்பட ஆரம்பிக்கும்.

நெல் பயிரிடல்.

***615 வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்சமயம் தமிழ் நாட்டில் எத்தனை வகையான நெல் பயிரிடப்படுகிறது?

(இ) அதில் காலத்தில் எத்தனை வகை நெல் பயிரிடலாம்?

(உ) கோடையில் எத்தனை வகை நெல் பயிரிடலாம்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ), (இ) & (உ) விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்த விவர அறிக்கையில் நான்கைந்து ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கிற நெல் வகைகளைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு புதிய நெல்வகை ஏதாவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 எல்லாம் வருடம் முழுவதும் சாகுபடி செய்யக் கூடியவையாக இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஐ.ஆர். 8 மழை காலத்தில் பலன் தராது. ஐ.ஆர். 20 மழை காலத்தில்தான் பலன் தரும். இது அனுபவம் இதுபற்றி என்ன கருத்துத் தெரிவிக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த ஆண்டு இரண்டொரு புது ரக நெல் விதைகள் கண்டுபிடிக்கப்பட்டு வெளியிடுவதாக இருக்கிறது. ஐ.ஆர். 8 தண்ணீர் குறைவாக இருக்கிற நிலையில்தான் நன்றாக வளரும். என்றாலும் எல்லா இடங்களிலும் பயிரிட முடியும்.

திரு. தி. பொன்னுமலை : கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் எந்தப் பயிர் எந்த மாதத்தில் வைக்க வேண்டும், நாற்றங்காலுக்கு எவ்வளவு நாள், எந்தந்த நேரத்தில் என்ன

@ 353-356-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.